# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 04 மே 16 - 30 | 2023 விலை 20 / -




## போதைப் பொருட்கள் இல்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் ட்ரையத்லான், டுயத்லான் போட்டிகள்...

## விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

# நிலவே நீயுமாய் என்னை ஏமாற்றுகிறாய்....?

ஒவ்வொரு முறையும் என்னை
சந்திக்கும் போது...

களவாடி செல்கிறாள்
பணத்தை அல்ல
என் மனத்தை...

அவளை
கண்டுபிடிக்கத் தேடினேன்...

தண்டிப்பதற்கு அல்ல
சொந்தமாக்குவதற்கு

கற்பனை கனவுகளை
கவிதை சிறைக்குள் அடைத்தேன்...

எங்கேயோ கடன் வாங்கி
கற்பனைக்கு வட்டியாக
கவிதை கொடுத்தேன்!

என் மௌன நதிகளை காயப்படுத்தாமல்
சேமித்து வைத்த நினைவுகளை
கொஞ்சம் செலவு செய்தேன்...

கீழே விழுந்த நான்
சில மனிதாபிமானம் உள்ள
பெண்களை உற்றுப் பார்த்தேன்
எனக்கு உதவவில்லை?

பிறகு காற்றின் கரம்பிடித்து
கவனமாக நடந்தேன்!

பெண்களை நினைத்து
என் மனது அழுதது...

அனைத்தையும் சொல்லும்
என் தாயிடம் கூட
சொல்ல முடியவில்லை
என் வலிகளை...

அன்பாய் கேட்கும்
என் நண்பர்களிடம் கூட
சொல்ல முடியவில்லை
என் வேதனைகளை...

ஆறுதல் தரும் கவிதைகளில் கூட
சொல்ல முடியவில்லை
என் கண்ணீரை
புரியாமல் பார்க்கும்

உன்னிடம் கூட
சொல்ல முடியவில்லை
என் காதலை...

பிறகு வானத்து நிலவில்
அவள் முகத்தை தேடினேன்...

உனக்கு காலும் இல்லை...
உனக்கு கையும் இல்லை...
ஆனால் மெல்லத் தவழ்கிறாய்

மேகம் விட்டு மேகம்
மறைந்து உன்னைத் தேட விடுகிறாய்

இந்த கண்ணாம்பூச்சி
விளையாட்டை எங்கு கற்றாயோ?...

உன்னை தேடும் என்னை
அழவைப்பதில் தான்
உனக்கு சந்தோசம் என்றால்...

என்றாவது ஒரு நாள்
உன்னை அழவைப்பேன்
என் கல்லறையில்.

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000

# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)


வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-04 மே 16-30 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.

**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.

**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.

**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.

**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா

**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.

**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ்,
S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.

**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.

**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.

**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.

**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.

**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.

**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத்,
P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.

**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி,
M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.

**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.

**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை),
R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி),
M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி),
K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்),
R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்),
C. முருகன் BA BL (நாகப்பட்டினம்),
D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி),
S. மோகன் காந்தி BA BL (ஒசூர்).

**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான்,
R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண்,
Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலூக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

### முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

**இப்படிக்கு**
**-ஆசிரியர்**






# போதைப் பொருட்கள் இல்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் போரூரில் ட்ரையத்லான், டுயத்லான் போட்டிகள்

**போதைப் பொருட்கள் இல்லா தமிழகத்துக்கான, ‘ட்ரையத்லான்’ மற்றும் ‘டுயத்லான்’ போட்டிகள் ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் சென்னை, போரூரில் நடைபெற்றது. தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்த இவ்விரு போட்டிகளில்480க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர்.**

போதை பொருட்கள் இல்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஆவடி காவல் ஆணையரகம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தி வருகிறது. குறிப்பாக, கடந்த ஆண்டு அக். 2ம் தேதி ஆவடி பகுதியில் இரவு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக ஆவடி காவல் ஆணையரகம் சார்பில், ‘போதைப் பொருட்கள் இல்லா தமிழகத்துக்கான, ‘ட்ரையத்லான்’ மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கான, ‘டுயத்லான்’ ஆகிய இரு போட்டிகள் நேற்று சென்னை, போரூரில் உள்ள ஸ்ரீராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடந்தது.

ஆவடி காவல் ஆணையரகத்தோடு, இந்தியன் ட்ரையத்லான் கூட்டமைப்பு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், ஸ்ரீராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை ரன்னர்ஸ் கிளப் ஆகியவை இணைந்து நடத்திய நீச்சல், சைக்கிள் ஓட்டம் மற்றும் ஓட்டம் ஆகிய 3 விளையாட்டுகளை உள்ளடக்கிய, ‘ட்ரையத்லான்’, ஓட்டம், சைக்கிள் ஓட்டம் ஆகிய இரு விளையாட்டுகளை உள்ளடக்கிய, ‘டுயத்லான்’ போட்டிகளை தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

3 பிரிவுகளில், ஆண்கள், பெண்களுக்கு 750 மீட்டர் தூரத்துக்கு நீச்சல், 20 கி.மீ. தூரத்துக்கு சைக்கிள் ஓட்டம், 4 கி.மீ. தூரத்துக்கு ஓட்டம் என, ‘ட்ரையத்லான்’ மற்றும் 4 கி.மீ. தூரத்துக்கு ஓட்டம், 20 கி.மீ. சைக்கிள் ஓட்டம், 2 கி.மீ. ஓட்டம் என, ‘டுயத்லான்’ ஆகிய இரு போட்டிகளில் தமிழ்நாடு உள்ளிட்ட 18 மாநிலங்களில் இருந்து, 16 வயது முதல், 40 வயதுக்கு மேற்பட்டோர் என, 480க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

விழிப்புணர்வு மினி மாரத்தான்: அதுமட்டுமல்லாமல், ஒரு கி.மீ. தூரத்துக்கு நடைபெற்ற போதை பொருட்கள் தடுப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், காவல்துறையினர், பொதுமக்கள் என, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இந்த ட்ரையத்லான், டுயத்லான் போட்டிகளில் வென்றவர்களுக்கு ரூ.3 லட்சம் பரிசுத் தொகை வழங்கப்பட்டது. இந்த போட்டிகளில் முதல் 8 இடங்களை பிடித்தவர்கள் ஆசிய விளையாட்டு போட்டி, இளையோருக்கான காமன்வெல்த் போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளில், தமிழ்நாடு டிஜிபி சைலேந்திர பாபு, ஆவடி காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர், எம்.பி. கலாநிதி வீராசாமி, எம்எல்ஏ சுதர்சனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# நான் சாதி பார்த்திருந்தால் இபிஎஸ்ஸை முதல்வராக கொண்டு வந்திருக்க மாட்டேன்

**நான் சாதி பார்த்திருந்தால் ஒரு கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்த எடப்பாடி பழனிசாமியை முதல்வராகக் கொண்டு வந்திருக்கமாட்டேன் என்று வி.கே.சசிகலா கூறியுள்ளார்.**

சென்னையில் வி.கே.சசிகலா வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம் தமிழக அரசியலில் எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகள் எவ்வாறு உள்ளது என்று கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "எதிர்க்கட்சிகளின் செயல்பாடுகளைத் தான் ஊடகங்கள் தினமும் பார்த்துக் கொண்டுள்ளன. பேச வேண்டிய நேரத்தில் எதை பேச வேண்டுமோ, மக்களுக்கு எதை எடுத்துக் கூற வேண்டுமோ, அதை பேச எதிர்க்கட்சிகள் தவறுகின்றன என்பதுதான் என்னுடைய கருத்து" என்றார்.

ஏப்.24ல் திருச்சியில் நடைபெறவுள்ள ஓபிஎஸ் மாநாடு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "எனக்கு அழைப்பு கொடுத்தால், ஊடகங்களிடம் சொல்லாமலா சென்றுவிடப் போகிறேன். அழைப்பு வரட்டும். அதன்பின்னர் என்ன நடக்கிறது என்று பாருங்கள்" என்றார்.

ஓபிஎஸ்ஸின் அரசியல் நிலைப்பாடு குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "எல்லோருக்கும் என்னைப்பற்றி புரிந்துகொள்ள ஒரு காலம் நேரம் வரும். அந்த காலநேரம் வரும்போது எல்லோருமே புரிந்துகொள்வார்கள். இது ஓபிஎஸ்ஸுக்கு மட்டுமல்ல, நான் பொதுவாக சொல்கிறேன்" என்றார்.

அதிமுக பொதுக்குழு தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், "சிவில் நீதிமன்றத்தின் முடிவு தெரியாமல், பிறப்பிக்கப்படும் எந்த உத்தரவும் நிரந்தரமல்ல என்று உச்ச நீதிமன்றமே கூறியிருக்கிறது. இதுக்கு மேல நான் என்ன சொல்ல முடியும்" என்றார். ஓபிஎஸ், சசிகலா, டிடிவி தவிர மற்றவர்கள் அதிமுகவில் இணையலாம் என்று இபிஎஸ் தரப்பில் கூறப்படுவது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "இதுகுறித்து எங்கள் கட்சியின் தொண்டர்களிடம் கேட்டால் தெரியும். காரணம் நான் எல்லோருக்கும் பொதுவான நபர். எனக்கென்று இது சொந்த ஊர், அது சொந்த ஊர் என்று நான் நினைத்தது கிடையாது. அதுபோல சாதியிலும் அப்படி நான் நினைத்தது இல்லை. அப்படி நினைத்திருந்தால், ஒரு கவுண்டர் சமூகத்தைச் சேர்ந்தவரை முதல்வராக நான் கொண்டு வந்திருக்கமாட்டேன்.

என்னைப் பொருத்தவரை எம்ஜிஆர், ஜெயலலிதாவின் தொண்டர்கள் என்றுதான் பார்க்கிறேன். மறைந்த முதல்வர் ஜெயலலிதாவும் அப்படித்தான் பார்த்தார். அவர், ஒரு ஏழைக்கும் எம்எல்ஏ வாய்ப்பு கொடுத்து, வெற்றி பெற வைத்து அமைச்சராகவும் மாற்றியிருக்கிறார். நாங்கள் அப்படி வளர்க்கப்பட்டவர்கள். எனவே, என்னுடைய வழி தனிவழியாகத்தான் இருக்கும்" என்று அவர் கூறினார்.

சட்டமேதை அம்பேத்கரின் 133வது பிறந்தநாளை முன்னிட்டு, ஆளுநர்கள் ஆர்.என்.ரவி, தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் சென்னையில் மரியாதை செலுத்தினர்.

கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில், அம்பேத்கர் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது படத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில், உயர் நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையத் தலைவர் எம்.வெங்கடேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள அம்பேத்கர் மணிமண்டபத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்பேத்கர் படத்துக்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் மரியாதை செலுத்தினர்.

# அம்பேத்கரின் 133வது பிறந்தநாள் கொண்டாட்டம்

## ஆளுநர், முதல்வர், அரசியல் கட்சித் தலைவர்கள் மரியாதை



முன்னதாக மணிமண்டபத்தில் தமிழக அரசு சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் ஐ.பெரியசாமி, கே.என்.நேரு, எ.வ.வேலு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர். பாலு, திருமாவளவன், கலாநிதி வீராசாமி, எம்எல்ஏக்கள் கு.செல்வப்பெருந்தகை, தாயகம் கவி, சென்னை மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் அமைச்சர் பூங்கோதை ஆலடி அருணா, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

இதையொட்டி முதல்வர் தனது சமூக வலைதள பக்கங்களில், “பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பித்துப் பிற்போக்குத்தனங்களில் மூழ்கியிருந்த இந்தச் சமூகத்தில் அறிவொளி ஏற்றிட்ட புத்துலக புத்தர் புரட்சியாளர் அம்பேத்கரின் லட்சியங்களை நெஞ் சிலேந்தி, சமத்துவ நாள் உறுதிமொழியேற்று போற்றினேன். சமத்துவம், சனாதனத்தின் எதிர்ச்சொல். மானுடத்தின் பொருள்" என குறிப்பிட்டுள்ளார்.

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்குகீழ் வைக்கப்பட்டிருந்த படத்துக்கு உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை நீதிபதி டி.ராஜா மரியாதை செலுத்தினார். உடன் நீதிபதிகள் ஆர்.மகாதேவன், எஸ்.வைத்தியநாதன், ஏ.டி.ஜெகதீஸ் சந்திரா, நிர்மல் குமார், அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.சண்முகசுந்தரம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

அதிமுக சார்பில், ஆற்காடு சாலையில் அமைந்துள்ள அம்பேத்கர் சிலைக்கு கட்சியின் அவைத் தலைவர் அ.தமிழ்மகன் உசேன், முன்னாள் அமைச்சர்கள் சி.பொன்னையன், டி.ஜெயக்குமார், என்.தளவாய்சுந்தரம் எம்எல்ஏ, பா.பென்ஜமின், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பி.வேணுகோபால், கட்சியின் அமைப்புச் செயலாளர் நா.பாலகங்கா உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

ராஜாஜி சாலை துறைமுக வளாகத்தில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, அம்பேத்கர் படத்துக்கு மரியாதை செலுத்தினார். துணைத்தலைவர் கரு.நாகராஜன், எஸ்.சி பிரிவு தலைவர் தடா பெரியசாமி உடன் இருந்தனர்.

ராயப்பேட்டை சத்தியமூர்த்தி பவனில் காங்கிரஸ் மாநில எஸ்.சிபிரிவு தலைவர் எம்.பி.ரஞ்சன்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அம்பேத்கர் படத்துக்கு தமிழக காங்கிரஸ் தலைவர்கே.எஸ்.அழகிரி மரியாதை செலுத்தினார். உடன் சு.திருநாவுக்கரசர் எம்.பி, எம்எல்ஏக்கள் செல்வப்பெருந்தகை, எஸ்டி ராமச்சந்திரன் உள்ளிட்டோர் இருந்தனர்.

கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரே உள்ள அம்பேத்கர் சிலைக்கு மதிமுக பொதுச்செயலர் வைகோ மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்றனர். மதிமுக துணை பொதுச்செயலாளர் மல்லை சத்யா, தலைமை நிலைய செயலாளர் துரை வைகோஉள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தியாகராய நகரில் உள்ள இந்தியகம்யூனிஸ்ட் கட்சித் தலைமையகத்தில் அம்பேத்கர் படத்துக்கு கட்சியின் மாநிலத் துணைச் செயலாளர் நா.பெரியசாமி, மாநிலச் செயற்குழு உறுப்பினர் வஹிதா நிஜாம்மரியாதை செலுத்தினர்.

அண்ணாசாலை எல்ஐசி அலுவலக வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் அரசியல் தலைமைக் குழுஉறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன், மத்திய குழு உறுப்பினர் சம்பத் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

ராஜாஜி சாலை துறைமுக வளாகத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கீழ் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த படத்துக்கு தமாகா தலைவர் ஜி.கே.வாசன் மலர்தூவி மரியாதை செய்தார். கோடம்பாக்கம் பவர் ஹவுஸ் பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு அமமுக துணை பொதுச்செயலாளர் ஜி.செந்தமிழன், அமைப்புச் செயலர் ம.கரிகாலன் மரியாதை செலுத்தினர்.

கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமையகத்தில் பொருளாளர் பிரேமலதா, துணைச்செயலாளர் ப.பார்த்தசாரதி உள்ளிட்டோர் அம்பேத்கர் படத்துக்கு மரியாதை செலுத்தினர்.

தி.நகரில் உள்ள தனது இல்லத்தில் வி.கே. சசிகலா அம்பேத்கர் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



# ரூ.1 லட்சத்து 34 ஆயிரம் கோடி திமுகவை சேர்ந்த 12 பேரின் சொத்து விவரம் வெளியிட்ட அண்ணாமலை

**திமுக அமைச்சர்கள், எம்.பி.க்கள் உள்ளிட்ட 12 பேரின் சொத்துப் பட்டியல் என்று பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, சில விவரங்களை வீடியோ பதிவாக நேற்று வெளியிட்டார்.**

சென்னையில் உள்ள பாஜக தலைமை அலுவலகத்தில் திமுகவினரின் சொத்துப் பட்டியல் என்றும், தனது ரபேல் வாட்ச் தொடர்பான விவரங்கள் என்றும் சில தகவல்களை ஷ்ஷ்ஷ். மீஸீனீணீஸீஸீமீஸீனீணீளீளீணீறீ.நீஷீனீ என்ற இணையதளத்தில் அண்ணாமலை நேற்று வெளியிட்டார். அதுகுறித்து பத்திரிகையாளர்களிடமும் பேசினார்.

திமுக அமைச்சர்கள் எ.வ.வேலு, கே.என்.நேரு, பொன்முடி மற்றும் அவரது மகன் கவுதம் சிகாமணி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, உதயநிதி ஸ்டாலின், எம்.பி.க்கள் கனிமொழி, ஆற்காடு வீராசாமி மகன் கலாநிதி வீராசாமி, டி.ஆர்.பாலு, ஜெகத்ரட்சகன், துரைமுருகன் மகன் கதிர் ஆனந்த், மு.க.ஸ்டாலின் மருமகன் சபரீசன், கலாநிதி மாறன் ஆகிய 12 பேரின் சொத்து விவரங்களை முதல்கட்டமாக

வெளியிட்டுள்ளதாக அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அந்தவகையில், ஜெகத்ரட்சகனுக்கு ரூ.50,219.37 கோடி, எ.வ.வேலுவுக்கு ரூ.5,552.39 கோடி, கே.என்.நேருவுக்கு ரூ.2,495.14 கோடி, கனிமொழிக்கு ரூ.830.33 கோடி, கலாநிதி மாறனுக்கு ரூ.12,450 கோடி, டி.ஆர்.பாலு ரூ.10,841.10 கோடி, கதிர் ஆனந்த் ரூ.579.58 கோடி, கலாநிதி வீராசாமி ரூ.2,923.29 கோடி, பொன்முடி மற்றும் அவரது மகன் கவுதம் சிகாமணி ரூ.581.20 கோடி, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ரூ.1,023.22 கோடி, உதயநிதி ஸ்டாலின் ரூ.2,039 கோடி மற்றும் சபரீசனுக்கு ரூ.902.46 கோடி மதிப்பில் சொத்துகள் உள்ளதாக அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழகத்தில் திமுகவினர் நடத்தும் பள்ளிகளின் சொத்து மதிப்பு ரூ.3,474.18 கோடி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களின் சொத்து மதிப்பு ரூ.34,184.71 கோடி எனவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த வகையில், திமுகவினரின் சொத்து மதிப்பு ரூ.1 லட்சத்து 34 ஆயிரம் கோடி என்று தெரிவித்த அண்ணாமலை, இதற்கான விளக்கத்தை அடுத்த வாரம் தெரிவிப்பதகாவும் கூறினார்.

மேலும், திமுகவினரின் பினாமி நிலங்கள், உறவினர்கள் பெயர்களில் உள்ள சொத்துகள், கறுப்பு பணம், கணக்கில் வராத நகை, ஆடம்பரக் கார்கள் மற்றும் வாட்சுகள் போன்ற விவரங்களை அடுத்தகட்டமாக வெளியிடுவதாகவும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பின்னர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாநிலத் தலைவராக எனக்கு மாதத்துக்கு ரூ.8 லட்சம் செலவாகிறது. நண்பர்கள், கட்சியின் உதவியால்தான் இவற்றைச் சமாளிக்க முடிகிறது. காருக்கு டீசல், உதவியாளர்கள் ஊதியம், வீட்டு வாடகைஎன அனைத்தையும் மற்றவர்கள்தான் கொடுக்கிறார்கள். நான் கட்டியிருக்கும் ரபேல் வாட்ச் `பெல் அண்ட் ரோஸ்' என்ற நிறுவனம், ரபேல் விமானத்தை தயாரித்த பிரெஞ்சு நிறுவனத்துடன் சேர்த்து தயாரித்தது. உலகில் மொத்தமே 500 ரபேல் வாட்ச்கள்தான் உள்ளன. நான் கட்டியிருப்பது 147வது வாட்ச். இந்தியாவில் 2 ரபேல் வாட்ச் கள் மட்டும்தான் விற்றுள்ளன. இதில் ஒன்றை மும்பையைச் சேர்ந்த ஒருவர் வைத்துள்ளார்.

மற்றொன்று கோவையைச் சேர்ந்த ஒரு வாட்ச் நிறுவனத்துக்கு விற்கப்பட்டது. இதை 2021 மார்ச் மாதம் கோவையைச் சேர்ந்த சேரலாதன் ராமகிருஷ்ணன் என்பவர் வாங்கினார். அவரிடமிருந்து மே மாதம் 27ம் தேதி ரூ.3 லட்சத்துக்கு நான் வாங்கினேன். இதற்கான ஆதாரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்துள்ளேன். நான்நேர்மையான அரசியலை முன்னெடுக்க வந்துள்ளேன்.

நான் வெளியிட்ட பட்டியலில் இருக்கும் அனைத்து சொத்துகளும்,திமுகவினரின் நேரடி குடும்பத் தொடர்பில் இருக்கக் கூடியவர்களின் சொத்துகள். பினாமி மற்றும் உறவினர்களின் பெயரில் இருக்கும் சொத்துகள் இதில் இடம் பெறவில்லை.

புதிதாக திமுகவில் சேர்ந்திருக்கும் சிலரின் கறுப்பு பணமும், பினாமி சொத்துகளுமே ரூ.20 ஆயிரம் கோடிக்கு மேல் இருக்கும். அதுகுறித்த விவரங்களை இரண்டாம் கட்டமாக நான் வெளியிடுவேன்.

உதயநிதி ஸ்டாலின் ரெட் ஜெயன்ட் நிறுவனத்தை தொடங்கியபோது, அவருக்கு எந்தவித தொழிலும், சொத்தும் கிடையாது. தற்போது ரெட் ஜெயன்ட் நிறுவனத்தின் மதிப்பு ரூ.2,010 கோடி.

முதல்வரின் மருமகன் சபரீசன், லண்டனில் உள்ள குற்ற வழக்குகளில் சிக்கிய நிறுவனங்களின் பங்குதாரராக உள்ளார். உதயநிதி ஸ்டாலினும், அன்பில் மகேஸ் பொய்யாமொழியும் இயக்குநராக இருந்து ராஜினாமா செய்த நிறுவனத்துக்கு, தமிழகத்தில் ரூ.1,000 கோடி முதலீடு செய்யும் வகையில், முதல்வர் ஸ்டாலின் துபாய் சென்றிருந்தபோது ஒப்பந்தந்தில் கையெழுத்திட்டுள்ளார்.

திமுக மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களின் சொத்து விவரங்களையும் 2024ம் ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்பு நான் வெளியிடுவேன். ஜூன் முதல் அல்லது 2வது வாரத்தில் தமிழகம் முழுவதும் 'என் மண்... என் மக்கள்' என்ற, ஊழலுக்கு எதிரான எனது நடைபயணம் தொடங்கும். இவ்வாறு அண்ணாமலை கூறினார்.



# ஐந்தறிவு குருவியின் விடாமுயற்சி!

கடற்கரை ஓரமாக பெரிய மரம் ஒன்று வளர்ந்திருந்தது. அதன் கிளை ஒன்று மிக நீண்டு கடல் நீருக்கு மேலாக நீட்டிக் கொண்டிருந்தது. அதன் உச்சியில் ஜோடி கடற்குருவி ஒன்று கூடு கட்டியது. அதனுள் நாலு முட்டைகளை இட்டு அடைகாத்து வந்தன. ஆண் குருவியும், பெண் குருவியும் அதே கூட்டில் வசித்தபடி தங்கள் குஞ்சுகள் வெளிவரும் நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

ஒரு நாள் பெரும் காற்று வீசியது. பெரிய அலைகள் பொங்கி எழுந்தன. கிளையில் இருந்த கூடு நழுவி காற்றின் வேகத்தில் கடலில் விழுந்து மூழ்கியது. குருவிகள் மனம் பதறிக் கதறின. கடல் நீரில் விழுந்து, கூடு மூழ்கிய இடத்திற்கு மேலாக கீச் கீச் என்று கத்தியபடியே சுற்றிச் சுற்றி வந்தன.

பெண் குருவி மனம் உடைந்து சொல்லியது. எப்படியாவது முட்டைகளை மீண்டும் நான் காண வேண்டும். இல்லையேல், நான் உயிர் வாழ மாட்டேன் என்றது. ஆண் குருவி சொன்னது. அவசரப்படாதே ஒரு வழி இருக்கிறது. நமது கூடு கரையின் ஓரமாகத் தான் விழுந்துள்ளது. கூட்டுடன் சேர்ந்து முட்டைகள் விழுந்ததால் நிச்சயம் உடைந்திருக்காது. அதனால் இந்த கடலிலுள்ள தண்ணீரை வற்றவைத்து விட்டால் போதும். முட்டைகளை நாம் மீட்டுவிடலாம். என்று பெண் குருவிக்கு தன்னம்பிக்கை ஊட்டியது.

**கடலை எப்படி வற்றவைப்பது?**

முட்டைகள் பொரிந்து குஞ்சுகள் வெளிவர இன்னும் பல நாட்கள் ஆகலாம். எனவே நாம் இடைவிடாமல் சில நாட்கள் முயல வேண்டும். நம் வாயில் கொள்ளும் மட்டும் தண்ணீரை எடுத்துக் கொண்டு பறந்து சென்று தொலைவில் கொட்டுவோம். மறுபடியும் திரும்பி வந்து மீண்டும் நீரை நிரப்பிக் கொண்டு போய் தொலைவில் உமிழ்வோம். இப்படியே இடைவிடாமல் செய்து கடல் நீரை வேறு இடத்தில் ஊற்றினால் கடல் நீர் மட்டம் குறைந்து தரை தெரியும். நமது முட்டைகள் வெளிப்படும்.

இதையடுத்து இரண்டு குருவிகளும் தன்னம்பிக்கையுடன் ஊக்கத்துடன் செயலில் இறங்கின. விர்ரென்று பறந்து போய் தங்களது சிறிய அலகில் இரண்டு விழுங்கு நீரை நிரப்பிக்

கொண்டன. பறந்து சென்று தொலைவில் போய் உமிழ்ந்தன. மீண்டும் பறந்து வந்து இரண்டு வாய் தண்ணீரை அள்ளின. கொண்டு போய் தொலைவில் கக்கின. இப்படியே இரவு பகல் என அந்நாள் முழுவதும் இடைவிடாமல் நடந்து கொண்டிருந்தது இவற்றின் நீர் அகற்றும் படலம்.

அப்போது அந்தக் கடற்கரை ஓரமாக முனிவர் ஒருவர் நடந்து வந்து கொண்டிருந்தார். மகா சக்திகள் நிறைந்த மகான் அவர். ஆளில்லாத அந்தப் பகுதியில் கீச் கீச் என்ற சப்தம் கேட்கவும் அவர் திரும்பிப் பார்த்தார்.

இரண்டு குருவிகள் பறந்து போவதைத் கண்டு சிரித்தபடியே நடந்தார். மீண்டும் கீச் கீச் என்ற சப்தம் குருவிகள் கடலுக்கு மேல் பறந்தன. எதையோ அள்ளின. மீண்டும் பறந்தன. இப்படி பலமுறை நடைபெறவும், முனிவருக்கு வியப்பு கடலில் இருக்கும் எதைக் கொத்துகின்றன இவை? அங்கு இரை ஏதும் இல்லையே என்று நினைத்தார் அவர்.

உடனே அந்த மகான் கண்களை மூடினார். உள்ளுக்குள் அமிழ்ந்தார். மறுகணம் அவர் மனதில் எல்லா நிகழ்ச்சிகளும் படம்போல் ஓடின. அவர் மனம் உருகியது. முட்டைகளை இழந்த தாயின் தவிப்பும், கடலையே வற்ற வைத்தாவது முட்டைகளை மீட்க வேண்டும் என்ற அதன் துடிப்பும். அவரது உள்ளத்தை நெகிழச் செய்தன. உடனே தனது தவ பலத்தை ஒன்று திரட்டிய முனிவர் கையை உயர்த்தினார். மறுகணம் கடல் சில அடிகள் பின் வாங்கியது. அங்கே கூட்டுடன் இருந்த முட்டைகள் தென்பட்டன. குருவிகள் அதைப் பார்த்து குதூகலத்துடன் கீச்சிட்டன. ஆளுக்கொன்றாக முட்டைகளை பற்றிக் கொண்டு போய் வேறிடத்தில் சேர்த்தன. நான் அப்போதே சொன்னேன் பார்த்தாயா? நமது ஒரு நாள் உழைப்பில் கடல் நீரை குறைத்து முட்டைகளை மீட்டு விட்டோம் பார்த்தாயா? என்றது ஆண் குருவி பெருமிதமாக முனிவர் சிரித்தபடி தொடர்ந்து நடந்தார்.

**இங்கே குருவிகள் முட்டைகளை மீட்டது அவற்றின் உழைப்பாலா?**

இல்லை.. முனிவரின் அருளால். ஆனால் அந்தக் குருவிகளுக்கு முனிவர் என்ற ஒருவரைப் பற்றியோ தவ வலிமை என்றால் என்ன என்பது பற்றியோ, எதுவுமே தெரியாது. ஆனால் தன்னம்பிக்கையுடன் கடல் நீரை அள்ளின.

அதே சமயம் குருவிகள் மட்டுமே கடல் நீரை மொண்டு சென்று ஊற்றிக் கொண்டிருக்கா விட்டால் முனிவர் தம் வழியே போயிருப்பார். அவரை மனம் நெகிழ வைத்தது எது..? அவற்றின் உழைப்பும் முயற்சியும்தான். ஆக இங்கே முட்டைகள் மீட்கப்பட்டது, குருவிகளாலும் தான். முனிவராலும் தான்.

முனிவரின் ஆற்றல் அவற்றுக்குப் பக்க பலமாக வந்து சேர்ந்தது. குருவிகளின் உழைப்புத்தான் அதற்கு அடிப்படையாக அமைந்தது. ஆகவே, உழைத்துக் கொண்டேயிருப்போம்...

# நீங்கள் துறைத்தேர்விற்கு தயாராகும் ஆசிரியர்களா?



நீங்கள் துறைத்தேர்விற்கு தயாராகும் ஆசிரியர்களா ? உங்களுக்கான ஒரு முக்கிய STUDY MATERIALS. 124- ACCOUNT TEST FOR SUBORDINATE OFFICER PART-I PENSTION PROBLEMS.இந்த தேர்விற்கு தேவையான அனைத்து மாதிரி கணக்குகளும் விரிவான விளக்கங்களுடன் 71 பக்கங்களில் PDF வடிவில்:

<https://questionpapersmaterials.blogspot.com/2021/0??6/study-materials-124-account-test-for.html>



# முழு ஈடுபாடு முக்கியம்!

**நாம் எந்த செயலில் இறங்கினாலும், எதைச் செய்தாலும், அதைச் சிறப்பாக செய்ய வேண்டும். சிறந்ததை மட்டுமே செய்ய வேண்டும். சீரிய முறையில் செய்ய வேண்டும்.. இதை மறக்காமல் செயல்படும்போது நாம் எது செய்தாலும் அது சிறப்பானதாக தானாகவே அமைந்து விடும்.**

எந்த ஒரு விஷயத்தைச் செய்யும் போதும் ஆர்வத்துடன் செய்யுங்கள். உங்கள் கற்பனைத்திறனை அதில் புகுத்துங்கள். பிறகு பாருங்கள் நீங்கள் நினைத்ததை விட அதைச் சிறப்பாக செய்து முடித்திருப்பீர்கள். எது ஒன்றுமே ஏனோ தானோவென்று செய்யாமல் இந்த செயலை நான் எப்படி சிறப்பாக செய்து காட்டுகிறேன் பார் என்று நினைத்து செய்யும் போதே அதில் பாதி வெற்றி கிடைத்து விடுகிறது.

சாமி கும்பிடும் போது பூ மாலை போடுவோம் அந்த பூக்களை வரிசைப் படுத்தினால் இன்னும் சிறப்பாக இருக்கும். தினமும் தான் நாம் சமைக்கிறோம். ஒரே மாதிரியாக இல்லாமல் கொஞ்சம் வெரைட்டியாக செய்தால் குழந்தைகள் யம்மி யம்மி என்று சாப்பிட்டு விடுவார்கள். எந்த ஒரு செயலும் ஆத்மார்த்தமாக செய்யும் போது அது சிறப்பானதாகவே அமைந்து விடுகிறது. குடும்பத்திற்காக வீட்டில் உணவு தயாரிக்கும் போது அன்போடு கலந்த உணவின் சுவை மேலும் அதிகமாகிறது. அலுவலகத்திலும் நமக்குக் கொடுத்த வேலையைச் சிறப்பாகச் செய்தால் அதனால் நமக்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எல்லா செயல்களையும் ஆர்வமா செய்யுங்க பிறகு பாருங்கள் எல்லாமே சிறப்பானதாக அமையும். மன நிறைவோடு ஒரு செயல் செய்வதால் அது மேலும் அழகாகிறது. செய்வனத் திருந்தச் செய் என்பார்கள் அது போல செய்யும் செயல்களில் கவனத்தோடும் ஆர்வத்தோடும் உங்களின் திறனையும் அதில் வெளிப்படுத்தி அச்செயலை உங்களால் முடிந்தவரை மேன்மேலும் சிறப்பானதாக்குங்கள். எதைச் செய்தாலும் சிறப்பா செய்யுங்க செமையாக வாழுங்கள்.

## உங்களுக்கு தெரியுமா?

நூல்கள் மற்றும் ஆசிரியர்கள் பெயர்கள்

1. கௌடில்யர் - அர்த்த சாஸ்திரம்
2. விசாகதத்தர் - முத்ரா ராட்சஸம் மௌரியர் கால வரலாறு
3. பதஞ்சலி முனிவர் - மகா பாஷீயம் (சுங்கர் வரலாறு)
4. காளிதாசர் - சாகுந்தலம், மேகதூதம், மாளவிகாக்னிமித்ரம், குமார சம்பவம், விக்ரம ஊர்வசியம் (குப்தர் கால வரலாறு)
5. பானப்பட்டர் - ஹர்ஷ சரிதம்.
6. கல்ஹணார் - இராஜ தரங்கிணி (காஷ்மீர் வரலாறு)
7. பிரத்விராஜ விஜயா - சந்த் பர்தோலி (சௌகான் வரலாறு)
8. மதுரா விஜயா - கங்கா தேவி
9. அமுக்த மால்யாதா - கிருஷ்ண தேவராயர்
10. பாண்டுரங்க மகாமாத்யா - தெனாலிராமன் (விஜய நகரப் பேரரசு வரலாறு)

**வ**றுமையிலும் அயராது உழைத்து தன் திறமையால் ஒரு மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார், அவர்தான் கலியமூர்த்தி IPS அவர்கள். இவர் பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு காலேஜ் சேருவதற்கு தன் அப்பா கூட வெறும் 300ரூ கொண்டு போனார் .

அவுங்க அப்பாவுக்கு மகன டாக்டர் படிக்க வைக்கனு ஆசை போதுமான வசதி இல்லாத காரணத்தால சாதாரண காலேஜ் சேத்தாறு. அப்படி கஷ்டப்பட்டு படுச்சு ஒரு நல்ல பதவிக்கு வந்தாரு



# அவமானங்களே வெற்றியின் வெகுமானங்கள்!

அது மட்டும் இல்லாம வறுமையால் எந்த காலேஜ் சேர முடியலையே அந்த காலேஜ் போல 100 காலேஜ் இருக்கற மாவட்டத்திருக்கு காவல்துறை கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்டார். எந்த காலேஜ் சேரவாய்ப்பு இல்லையோ அந்த காலேஜ்க்கே சிறப்பு விருந்தினராக 3 முறை அழைக்கபட்டார். தன் அப்பா பட்ட அவமானத்தை வெற்றியின் வெகுமானமாக மாற்றினார் .

## கல்வியே சொத்து

கலியமூர்த்தி அவர்கள் ஒரு கல்லூரி விழாவுக்கு சென்றபோது அங்கே மாணவர்களிடையே கல்லூரி அவ்வளவு உயர்ந்ததா? கல்வி என்பது அவ்வளவு உயர்ந்ததா? ஏன் உயர்ந்தது தெரியுமா நீ கோவிலுக்கு செல்ல வேண்டுமென்றால் இந்துவாக இருக்க வேண்டும். சர்ச்க்கு செல்ல வேண்டுமென்றால் கிறிஸ்துவனாக இருக்க வேண்டும். மசூதிக்கு போக வேண்டும் என்றால் இஸ்லாமியராக இருக்க வேண்டும். கல்லூரிக்கு போக வேண்டும் என்றால் நீ மனிதனாக இருந்தால் மட்டுமே போதும். கல்வியின் சிறப்பாக கல்வி ஏழைகளுக்கு செல்வம். செல்வர்களுக்கு அணிகலன். வீட்டிற்கு விளக்கு, நாட்டிற்கு நன்மை பெண்களுக்கு பாதுகாப்பு. பிளாட்டோ கூறியது படிக்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பது மேல். யார் எல்லாம் படிப்பதற்காக புக்கை நோக்கி தலை குனிகிறார்களோ அவர்களே வாழ்க்கையில் தலை நிமிர்ந்து நடப்பவர்கள்.



# குழந்தைகள் கேள்வி கேட்க தகுதியானவர்களா?

**பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளை கேள்வி கேட்க அனுமதிக்கிறீங்களா?**

குழந்தைகளுக்கு இன்போர்மஷன் ப்ரண்ட்ஸ் மூலமாகவோ, உங்க மூலமாகவோ மட்டும் கிடைக்கறது இல்ல .

இந்த காலத்துல மிகப்பெரிய சக்தியான சோசியல் மீடியா மூலமா குழந்தைகளுக்கு இன்போர்மஷன் கிடைக்கறது. அதுல கிடைக்கற இன்போர்மஷன வேற கோணத்துல பாப்பாங்க. அப்படி அவுங்க புரிந்துகிட்ட இன்போர்மஷன உங்க கிட்ட சொல்லும் போதோ, கேக்கும்போதோ உதாசினப்படுத்த வேண்டாம்,

ஏன், எதற்கு என்று வினாவிக்கும் போது ஊக்கப்படுத்துங்கள் அப்பொழுதான் அவர்கள் பல விஷயங்களை கற்றுக்கொள்வார்கள்..

**உடல்மொழி மூலம் குழந்தைகளிடம் எவ்வாறு உரையாடுவது ?**

- இந்த நவீன காலக்கட்டத்தில் குழந்தைகளுக்கு வாய்மொழி மூலமாக சொல்லித்தருவதை விட உடல்மொழி மூலமாக சொல்லித்தருவதை குழந்தைகள் எளிதாக கற்றுக் கொள்கிறார்கள்

- அதனால் குழந்தைகளுக்கு உடல்மொழி மூலமாக கற்றுக் கொடுக்க முயற்சி செய்வோம்

- உதாரணமாக ஆன்லைன் கிளாஸ் எடுக்கும் போது குழந்தைகளிடம் புரிஞ்சுதா என கேக்கும் போது குழந்தைகள் புரியாமல் பதிலளிப்பதில்லை. இதுவே அவுங்ககிட்ட கட்டைவிரலை தூக்கி காட்டி புரிஞ்சுதா என கேட்ட புரிஞ்சுதுனா அவுங்களும் கட்டைவிரலை தூக்கி காட்டு வாங்க. புரியலையினா கட்டைவிரலை கீழ இறக்கி காட்டுவாங்க.

- இது மாதிரி குழந்தைகளுக்கு உடல்மொழி மூலம் கிளாஸ் எடுத்தா அவுங்களுக்கு புரியும் .

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN


UMMANI
TEA DUST
SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
தங்கள் தொடர்புக்கு:
9952119066

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17

